**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ந.க.எண்.1096/ஆ5/2025, நாள்.25/04/2025**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – 2024–2025 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பு – முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான சூன் திங்கள் 3ஆம் நாளினை ஆண்டுதோறும் செம்மொழி நாள் விழாவாகக் கொண்டாடுதல் – 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வெழுதிய பள்ளி மாணாக்கர்களுக்கான கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டி நடைபெறுதல் – மாணாக்கர்களை போட்டியில் பங்கேற்க செய்தல் – தொடர்பாக

பார்வை

1. 03.10.2024 ஆம் நாளிட்ட தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ 1.1)த் துறை, அரசாணை (நிலை) எண். 205
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 45454/எம்1/இ2/2023 நாள். 04.03.2025
3. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 21.03.2025
4. வேலூர் மாவட்டம், தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநரின் கடித ந.க.எண்.46/2025, நாள். 22.04.2025

•••••

2024–2025ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை மற்றும் பார்வை 1–ல் காணும் அரசாணையின்படி 2025 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான சூன் 3–ஆம் நாளன்று செம்மொழி நாள் விழா கொண்டாடப்படவுள்ளதால் 2025–2026 ஆம் நிதியாண்டிற்கு அனைத்து பள்ளி மாணாக்கர்களுக்கு கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகளும், பாராட்டுச் சான்றுகளும் வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 4–ல் காணும் கடிதத்தில், செம்மொழியின் சிறப்பையும் முத்தமிழறிஞரின் தமிழ்த்தொண்டினையும் பெருமையையும் மாணாக்கர்களிடம் உணர்த்திடும் வகையில் வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும தனியார் உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வெழுதிய மாணாக்கர்களுக்கு மாவட்ட அளவிலான கட்டுரை போட்டி மற்றும் பேச்சுப் போட்டிகள் கீழ்காணும் படி நடைபெறவுள்ளது.

**மாவட்ட அளவிலான கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டி**
**நாள்– 09.05.2025 (வெள்ளிக்கிழமை)**
**நேரம் – காலை 9.30 மணி**
**இடம் – ஸ்ரீ வெங்கடேஸ்வரா நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளி, வேலூர்.**

மாவட்ட அளவிலான இப்போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெறும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே முதல் பரிசாக ரூ.10,000/– இரண்டாம் பரிசாக ரூ.7,000/– மூன்றாம் பரிசாக ரூ.5,000/– மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களும் வழங்கப்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அளவிலான போட்டிகளில் முதல் பரிசு பெறும் மாணாக்கர்கள் 17.05.2025 அன்று சென்னையில் நடைபெறவுள்ள மாநில அளவிலான போட்டியில் பங்கேற்க வேண்டும்.

'செம்மொழியின் சிறப்பு மற்றும் முத்தமிழறிஞர் கலைஞரின் தமிழ்த்தொண்டின் பெருமை" சார்ந்து தலைப்புகள் கீழ்காணும் படி-

| கட்டுரை போட்டிக்கான தலைப்பு | பேச்சுப் போட்டிக்கான தலைப்பு |
|---|---|
| 1. முத்தமிழறிஞர் கலைஞர் எழுத்தில் சமூகநீதி | 1. கவிஞர் முத்தமிழறிஞர் கலைஞர்<br>2. மொழியின் நாயகர் முத்தமிழறிஞர் |

போட்டிக்கான விதிமுறைகள் மற்றும் பங்கேற்பு படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் படி நடைபெறும் மாவட்ட அளவிலான கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிக்கு 300 மாணாக்கர்களுக்கு குறையாமல் பங்கேற்க தெரிவிக்கப்பட்டுள்ளதால் தலைமையாசிரியர்கள் / ஆசிரியர்கள் மாணாக்கர்களின் செல்பேசி எண்ணுடைய குழுவில் கட்செவி (Whatsapp) மூலம் விவரம் தெரிவித்து அனைத்து பள்ளிகளில் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வெழுதிய மாணாக்கர்கள் அதிக அளவில் இப்போட்டியில் பங்கு பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் உயர் / மேல்நிலைப் தனியார் பள்ளிகளின் முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பங்கேற்பு படிவத்தினை பூர்த்தி செய்து தலைமையாசிரியரின் ஒப்பத்துடன் 05.05.2025-க்குள் tamilvalarchivlr17@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். மேலும் மாணாக்கர்கள் போட்டி நடைபெறும் நாளன்று பங்கேற்பு படிவத்தினை நேரில் ஒப்படைக்க வேண்டும். இப்போட்டியில் பங்கேற்கும் மாணாக்கர்கள் விவரத்தினை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள Online Google Sheet-ல் தவறாமல் பதிவுகள் மேற்கொள்ளுமாறு அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் உயர் / மேல்நிலை தனியார் பள்ளிகளின் முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு -

1. போட்டியின் விதிமுறைகள்
2. பங்கேற்பு படிவம்
3. Online Google Sheet Link – https://docs.google.com/spreadsheets/d/1JuFgl7Z5NILZZ_uk23h_FrQUof6TO6DCi9fIE-h1las/edit?usp=sharing

முதன்மைக் கல்வி அலுவலர்(பொ),
வேலூர்.

பெறுநர் -
தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
அனைத்து அரசு /நிதியுதவி / தனியார் உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்-

1. மாவட்ட தமிழ் வளர்ச்சி துணை இயக்குநர்,
   தமிழ் வளர்ச்சி துறை, மாவட்ட ஆட்சியர் வளாகம்,
   வேலூர் மாவட்டம்.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
   (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள்)
   தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பப்படுகிறது.
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)